செ.வெ.எண்: 58 நாள்:26.1.2018

**புதுக்கோட்டை மாவட்டம்**

**அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வெள்ளனூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் 46,593 மனித வேலை நாட்களை உருவாக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப, அவர்கள் முன்னிலையில் பொதுமக்கள் ஒப்புதல் அளித்தனர்.**

புதுக்கோட்டை மாவட்டத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு மாவட்டத்தில் உள்ள 497 கிராம ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபை கூட்டங்கள் இன்று (26.1.2018) நடைபெற்றன.

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வெள்ளனூர் ஊராட்சி வெள்ளனூரில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டார். இந்த கிராம சபைக்கூட்டத்தில் பொதுவிநியோகத்திட்ட பதிவேடுகள், ஊராட்சியில் பல்வேறு நிதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித்திட்டப்பணிகள், மேற்கொள்ளப்பட்ட செலவு கணக்குகள் குறித்த விபரங்கள், புத்தகங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு, அவை பொதுமக்களுக்கு படித்தும் காண்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டன. மேலும் குடிநீர் பயன்பாடு, குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துதல் குறித்தும், டெங்கு கொசுப்புழு உண்டாக்காமல் தடுப்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் 2018 – 2019 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் வெள்ளனூர் ஊராட்சியில் மேற்கொள்ளப் பட உள்ள திட்டப்பணிகள் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இயற்கை வள மேலாண்மை பணிகள் திட்டத்தின் கீழ் ரூ.15,00,000 மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளவும், ரூ.3,50,000 மதிப்பீட்டில் உறிஞ்சு குட்டை அமைக்கவும், ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின்கீழ் ரூ.20,00,000 மதிப்பீட்டில் மரக்கன்றுகள் வளர்க்கவும், ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் பாசன கால்வாய் ஏற்படுத்தவும், தனிநபர் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ் 25 பயனாளிகளுக்கு ரூ.33,75,000 மதிப்பீட்டில் மாட்டுக் கொட்டகை அமைக்கவும், ரூ.8,50,000 மதிப்பீட்டில் 10 பயனாளிகளுக்கு ஆட்டுக் கொட்டகை அமைக்கவும், ஊரக இணைப்பு சாலை திடடத்தின்கீழ் ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் 2 சாலைகள் அமைக்கவும், ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் 2 பக்கவாட்டு தெருக்கள் அமைக்கவும் பொதுமக்கள் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் பேரிடர் மேலாண்மை திட்டத்தின்கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் வெள்ள கால்வாயை சீரமைக்கும் பணி மேற்கொள்ளவும், ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் புதிய வடிநீர்

கால்வாய் அமைக்கவும், அறுவடைக்கு பின்னர் சேமிப்பு கட்டடங்கள் கட்டும் திட்டத்தின்கீழ் ரூ.6.50 லட்சம் மதிப்பீட்டில் 1 கட்டடம் கட்டவும், ரூ.6.60 லட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழு கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளவும் பொதுமக்கள் ஒப்புதல் அளித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த பெண்கள் மேற்கொண்ட தூய்மை பணிகள் காரணமாக டெங்கு கொசுக்கள் உருவாகாமல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டது. வெள்ளனூர் ஊராட்சியில் இன்று பொதுமக்கள் அளித்த கோரிக்கையின் அடிப்படையில் குளத்தினை ஆழப்படுத்தி, படிக்கட்டுகள் அமைக்கும் பணி ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். ஊராட்சி பகுதிகளில் நீண்ட நாட்கள் பயன்படுத்தும் வகையில் சிமெண்ட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் தங்கள் வீடுகளில் தனிநபர் கழிப்பறை அமைப்பதுடன் தொடர்ந்து முறையாக பயன்படுத்திட வேண்டும். தனியார் இடங்களில் வளரும் வேலிக்கருவேல் மரங்களை முற்றிலுமாக அகற்றிட வேண்டும். மேலும் பொதுமக்கள் தங்கள் தெரு மற்றும் வீடுகளில் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரித்திட வேண்டும். இதற்கு பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்கள் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு தூய்மையின் அவசியத்தை எடுத்துக்கூறி தூய்மை தூதுவர்களாக விளங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.எம்.சந்தோஷ்குமார், கோட்டாட்சியர் திரு.சே.ஹா.சேக்முகையதின், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.முருகண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.நாகராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**